2023 அக்டோபர் 9]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற காமராஜர் கல்வி வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக வகுப்பறைகள்,* laboratories *இல்லாத இடங்களில் அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதிலுமிருந்து அத்தகைய கோரிக்கைகள் வருகிற கல்லூரிகளில் எல்லாம் படிப்படியாகத் தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உங்கள் கோரிக்கையையும், மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் கோரிக்கையையும் ஏற்று உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக இருந்ததை, இந்த ஆண்டுதான் நீங்கள் அரசுக் கல்லூரியாக மாற்றினீர்கள். அதனால், நிச்சயமாக அங்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இதுகுறித்து என்னிடமும் மனு கொடுத்திருக்கிறார்கள். நல்ல செய்தி வரும்.*

வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. *ரகுராமன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

உயர்மட்டப் பாலம்

***58261—திரு. A.R.R. ரகுராமன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்திரப்பட்டி–நத்தப்பட்டி சாலையில் உள்ள தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கேள்வி நேரமாக இருந்தாலும் ஒரு செய்தியை உங்களிடம் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டியாக விளங்குகிறார் என்பதற்கு ஓர் அடையாளமாக ஒரு செய்தியைச் சொல்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்னர் தெலுங்கானா மாநிலத்திலே காலை சிற்றுண்டி திட்டத்தை அம்மாநில முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருக்கிற தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் காலை சிற்றுண்டித் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். எனவே, அந்தத் திட்டத்திற்குத் தாயாக விளங்குகிற தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு என்னுடைய பதிலைச் சொல்ல விழைகிறேன். உயர்மட்டப் பாலம் அமைக்கக் கோரியுள்ள இடமானது மாவட்ட இதர சாலையான (Other District Roads) சம்சிகாபுரம்— வடகரை சாலை கி.மீ. 2.4-ல் அமைந்துள்ளது. அந்தத் தரை மட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைக்க வேண்டும் என்பதற்காக ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்புத் திட்டம் (CRIDP) மூலமாக 2022–2023-ல், 186 இலட்சம் ரூபாய்க்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பாலமானது 8.6 மீட்டர் நீளமுள்ள பாலமாகும். இப்பணி 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும் என்கின்ற நல்ல செய்தியினை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள்.*

திரு. A.R.R. ரகுராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் தொகுதி, சத்திரப்பட்டி-நத்தப்பட்டி*

2023 அக்டோபர் 9]

சாலையில் பாலப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் சாத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதன்முதலாகப் பொறுப்பேற்றுள்ள இந்த திராவிட மாடல் ஆட்சியில், தமிழ்நாட்டிலுள்ள தரைமட்டப் பாலங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக உயர்மட்டப் பாலங்களாக மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் எடுத்துக்கொண்டு, அப்பணிகள் இந்த 5 ஆண்டுக்காலங்களில் முடிக்கப்பட வேண்டுமென்று ஒன்றன்பின் ஒன்றாகப் பாலங்கள் அனைத்தும் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில், சாத்தூர் தொகுதியை எடுத்துக்கொண்டோமேயானால், அந்தத் தொகுதியில் மட்டும் 53 பாலங்கள் இருக்கின்றன. அவற்றில், தற்போது 18 பாலங்கள் நிறைவுபெற்றுவிட்டன. 3 பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்கின்ற பணிகள் 9 பாலங்களுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் மூலமாக 2 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 2 ஆண்டுக்காலத்தில், அந்த ஒரு தொகுதியில் மட்டும் மொத்தம் 32 பாலப் பணிகள் நடைபெற்றுள்ளன. எஞ்சியுள்ள 21 பாலப் பணிகள் அடுத்த இரண்டாண்டுக் காலத்திற்குள் முடிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஆவார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், இந்தக் கட்சி, அந்தக் கட்சி, இவர்கள், அவர்கள் என்றெல்லாம் பாகுபாடு பார்க்காமல் 233 தொகுதிகளிலும் அனைத்துப் பணிகளும் நடைபெற வேண்டும் என்ற எண்ணம்தான் அவர்களுக்கு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், ஓர் உதாரணத்திற்காகத்தான் இந்தத் தொகுதியைச் சொல்லியிருக்கிறேன். இப்படித்தான் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தொகுதிகளிலும், எந்தவித பாகுபாடும் இல்லாமல், உயர்மட்டப் பாலப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லிவீட்டீர்களா! மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லிவிடுங்கள்.

திரு. A.R.R. ரகுராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர்-தாயில்பட்டி நான்கு வழிச்சாலையில் ஒரு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே என்னிடம் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்த திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. நிதிநிலைக்கேற்ப, இந்த ஆண்டு அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டை ஈரோடு மாவட்டத்தோடு இணைக்கின்ற சாலைகள் 2 சாலைகள். ஒன்று கொக்கராயன்பேட்டை வழியாக, மற்றொன்று வெப்படை வழியாக. இரண்டு வழிகளிலுமே railway gate இருக்கின்றது. இது ஈரோடு-சென்னை பிரதான இரயில்வே பாதையாகும். இரண்டு பகுதிகளிலும் மேம்பாலம் வேண்டுமென்பது பல ஆண்டுகளாக எங்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்த railway gate வழியாக அந்தப் பகுதியில் பயணித்திருக்கிறார்கள். எனவே, இந்த இரண்டு railway gate பகுதிகளிலும், மேம்பாலம் அமைத்துத் தர எப்போது முன்வருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2023 அக்டோபர் 9]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே பாலங்கள் போக்குவரத்துச் செறிவைப் பொறுத்து அமைக்கப்படுகின்றன. அப்பகுதியில் போக்குவரத்துச் செறிவு குறைவாக இருந்தால், பாலம் அமைப்பதற்கான முழு செலவையும் மாநில அரசாங்கம் ஏற்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. போக்குவரத்துச் செறிவானது குறிப்பிட்ட அளவிற்கும் அதிகமாக இருந்தால், ஒன்றிய அரசும், மாநில அரசும் 50:50 என்ற அடிப்படையில் பாலத்தைக் கட்டலாம். அந்தப் பாலங்கள் வேண்டுமென்று ஏற்கெனவே பலமுறை என்னிடம் கடிதம் கொடுத்திருக்கிறார். அவற்றைத் துறைக்கு அனுப்பியிருக்கிறேன். துறையின் மூலமாகப் பதில் வர வேண்டும் என்றில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, நிதி ஒதுக்கீடு செய்து, பாலம் கட்டுவதற்கு வேண்டிய முயற்சிகளை இந்தத் துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. கடலூர் மாவட்டத்தில், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீமுஷ்ணம் வட்டம், ஸ்ரீமுஷ்ணம் ஒன்றியத்தில், என்னுடைய தொகுதியிலுள்ள 15 கிராமங்களுக்கு நடுவே வெள்ளாறு பாய்ந்து கொண்டிருக்கிறது. அங்கு புதிய பாலம் அமைப்பதற்கான திட்டங்கள் ஏற்கெனவே தீட்டப்பட்டிருக்கின்றன. எனவே, சுமார் 30 கி.மீ. அளவிற்குச் சுற்றிக்கொண்டு ஒன்றிய அலுவலகத்திற்கும், வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் செல்லக்கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தால், வெள்ளாற்றின் குறுக்கே புதிதாகப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற*

அதே பாலத்தை, அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் என் பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டும், பாலத்தைக் கட்டித் தரவேண்டும் என்று பல முறை என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் நாங்கள் அறிவுறுத்தியிருக்கிறோம். அதற்கு வேண்டிய design மற்றும் கட்டட மதிப்பீடு ஆகியவையெல்லாம் தயாராகிக் கொண்டிருக்கின்றன. அது நிறைவு பெற்றவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, நிதியை ஒதுக்கி அவர் கோருகிற பாலம் விரைவிலேயே கட்டிமுடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் வைகை கரையினுடைய இருபுறமும் உள்ள சாலைகள் இன்று போக்குவரத்துக்கு மிக வசதியாக இருக்கின்றன. ஆனாலும்கூட அந்தச் சாலைகளில் சில இடங்களில் குறைபாடுகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் பல தடவை அதைப் பார்த்திருக்கிறார். அவற்றைச் சீரமைக்கும் பணிகளை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள் சொல்கிற அந்தப் பாதையைப் பலமுறை அவரோடு நான் சென்று பார்த்திருக்கிறேன். அதில் ஏற்கெனவே நில எடுப்புப் பிரச்சினை இருந்தது. அது தனியார் இடம் அல்ல; வருவாய்த் துறைக்குச் சொந்தமானதுதான் என்று அவரே என்னிடத்தில் சொன்னதன் அடிப்படையிலே, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நான் சொல்லியிருக்கிறேன். அது முழுமையாக அரசாங்க இடமா அல்லது தனியார் இடமா என்று முடிவு செய்து கையகப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது. அதை முடிவு செய்தவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதற்குப் பணம் ஒதுக்கப்படும். அந்தச் சாலை கட்டாயம் போடப்பட வேண்டிய சாலைதான். மதுரை தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டிருக்கிறது;

2023 அக்டோபர் 9]

அங்கு நெரிசல்கள் அதிகமாகி இருக்கின்றன என்று ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உணர்ந்த காரணத்தினால்தான், மதுரைக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்ற அடிப்படையிலே, இப்போது கோரிப்பாளையத்திலே ஒரு பாலமும், அப்பல்லோ மருத்துவமனைக்குப் பக்கத்திலே ஒரு மேம்பாலமும், இரண்டு பாலங்களும் ஒரே நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு, பணம் ஒதுக்கப்பட்டு, tender *விடப்பட்டு, ஒரு சில தினங்களிலே பணிகளைத் துவங்கயிருக்கிறோம். ஆக, சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ. தளபதிக்கு நான் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு மதுரைமீது அதிகமான அக்கறை உள்ள காரணத்தினால், அந்தப் பாலமும், அந்தச் சாலையும் கட்டாயம் அமைக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.S. *பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத் தடுப்புப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுவருவதன் ஓர் அங்கமாக, என்னுடைய தொகுதியில்* O.M.R. *சாலையில் குறுக்கு வடிகால்களும், சாலையோர மழைநீர் வடிகால்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால்* O.M.R. *சாலையில் ஓரிரு இடங்களில்* missing links*-கள் இருக்கின்றன. குறிப்பாக கேளம்பாக்கம்-படூர் சந்திப்பில் இருக்கக்கூடிய பூர்வங்கரா என்னுமிடத்தில்* missing link *இருக்கிறது. இந்தப் பணிகள் நிறைவடைய வேண்டுமென்று சொன்னால் அவற்றையெல்லாம் செய்திட வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவற்றை அமைத்துத் தர முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தளவில், மழைக்காலத்திற்கு முன்பாகவே பணிகள் அனைத்தும் நடைபெற வேண்டுமென்று, ஒருமுறைக்குப் பலமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துறையின் சார்பாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்துகிறார்கள். அரசு அதிகாரிகளும் பணிகளை விரைந்து செயல்படுத்த வேண்டும்*

என்பதற்காக, பொறியாளர்களை வைத்துக் கொண்டு நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் ஒருமுறைக்கு மூன்று முறை கூட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். அதற்காக ரூ.100 கோடி பணத்தையும், நிதித் துறை மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்தார்கள். அப்பணிகள் விரைந்து நடைபெற வேண்டும் என்பதற்காக ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, தினமும் ஒப்பந்ததாரர்களை அழைத்து, குறிப்பிட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். OMR-ஐப் பொறுத்தவரையில், அது ஒரு நீண்ட நெடிய, மிக அழகாக விரிவுபடுத்தியிருக்கிற தரமான சாலையாக இருந்தது. இப்போது, மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, பல இடங்களில் வெட்டிப் போடுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைத்தான் இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே நீங்கள் இது குறித்து ஒரு கடிதமும் அனுப்பியுள்ளீர்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் மற்றும் கோட்டப் பொறியாளர்களை அழைத்துப் பேசி, அக்கடிதத்தை அவர்களிடத்தில் கொடுத்துவிட்டு, அப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டு, சட்டமன்ற உறுப்பினரிடத்திலே தகவலைச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அது உடனடியாக நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் கேட்ட கேள்வியுடன் கூடுதலாக ஒரு கேள்வி. திருச்செங்கோட்டிலிருந்து ஈரோடு செல்கின்ற சாலை நான்குவழிச் சாலையாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 3 ஆண்டுக் காலமாக அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது இருக்கின்ற ஒரே வழி திருச்செங்கோட்டிலிருந்து கொமரபாளையம் செல்கின்ற சாலை. ஆனங்கூரிலே இரண்டு இரயில்வே கடவுகள் வந்துகொண்டிருக்கின்றன. அது கடந்த காலத்திலேயே, இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அன்றையதினம் முதலமைச்சராக இருந்தபோது, ரூ.70 கோடி நிதியை ஒதுக்கி அரசாணை வெளியிட்டிருந்தார்கள். நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே

2023 அக்டோபர் 9]

கேட்கின்றபோது, அது எனக்குத் தெரியும், நானும் நேரடியாக வந்து பார்க்கின்றேன் என்று சொல்லி மாண்புமிகு அமைச்சரும் நேரடியாக வந்து பார்த்தீர்கள். அப்போது நீங்கள் சொன்னது, "நிலம் எடுக்கும் பணி தாமதமாகிக் கொண்டிருக்கிறது; நிலம் எடுத்தவுடன் பணிகள் தொடங்கப்படும்" என்று சொன்னீர்கள். அப்போது நான் சொன்னேன், நிலம் எடுக்கும் பணிகள் அதிகமாக இல்லை, ஆகையால் சற்று விரைவாக பணிகள் நடக்க வேண்டும், ஏனென்று சொன்னால், திருச்செங்கோட்டில் இருக்கின்ற 2 கல்லூரிகளில் மட்டுமே 5,000 பேர் படிக்கின்றார்கள். 5,000 பேர் படிக்கின்றார்கள் என்று சொன்னால் எத்தனை பேருந்துகள் வரும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது இல்லை.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.*

திரு. பி. தங்கமணி: *ஆகவே, அது மக்களினுடைய மிக முக்கியத் தேவையாக இருக்கின்றது. இரண்டு gates-ல் ஒரு gate மூடிவிட்டால்கூட, கிட்டத்தட்ட நூறு வண்டிகள் நின்றுவிடுகின்றன. மேலும், அது குறுகிய சாலையாக இருக்கின்ற காரணத்தினால், traffic ஆகிவிடுகிறது; அரை மணி நேரத்திற்குமேல் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதன் முக்கியத்துவம் கருதி, அதை உடனடியாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, அவர் சொன்னதைப்போல, கொக்கராயன்பேட்டை இரயில்வே பாலமும் தேவையாக இருக்கின்றது; இன்னொன்று, ஜேடர்பாளையம், பரமத்தி-வேலூர் தொகுதியில் பில்லுக்கல்பாளையத்திலிருந்து கொடுமுடியை இணைக்கின்ற பாலம்; அதுவும் ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டு, அதில் எந்தப் பணியும் நடைபெறாமல் இருக்கிறது. அதனுடைய நிலைமை என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

[*2023 அக்டோபர் 9*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தோழமை கட்சித் தலைவர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் குறிப்பிட்ட அதே பாலத்தைத்தான் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்களும் கேட்கிறார்கள். அந்தப் பாலத்தை உடனே கட்ட வேண்டுமென்ற அடிப்படையிலேயும், சாலையை உடனே சீரமைக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும் அந்தக் கோரிக்கை ஏற்கெனவே அவரால் என்னிடத்தில் தெரிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட கோட்டப் பொறியாளரை, 'நீங்கள் நேரடியாகச் சென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்களைப் பார்த்து, அவர் என்ன பிரச்சினை சொல்கிறார் என்பது குறித்து பேசிவிட்டு வாருங்கள்' என்று நான் சொன்னேன். அதற்குப் பிறகு, அவர் அவரிடம் பேசிவிட்டு வந்து, அவர் இந்தப் பிரச்சினையை வைத்திருக்கிறார் என்று என்னிடம் சொன்னார். நான், அதனை உடனே செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறேன். நான், ஏற்கெனவே சொன்னதைப்போல, இரயில்வே பாலம் கட்டுகிறபோது பாதி பணம் ஒன்றிய அரசாங்கத்திடமிருந்து நாம் பெற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது; பாதி பணம்தான், அதாவது, 50 சதவிகிதம் மாநில அரசாங்கம் போட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், ஏற்கெனவே பல பாலப் பணிகள், இரயில்வே பாலப் பணிகள் எல்லாம் நிலுவையில் இருந்து, அந்தப் பாலப் பணிகளுக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுத்து இப்போது நாம் கட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பல ஆண்டுகாலமாகப் பார்த்தீர்களென்றால், பாலம் போட்டிருப்பார்கள்,* approach road *இருக்காது. ஏனென்றால், நிலத்தைக் கையகப்படுத்தவில்லை. இந்த அரசாங்கம் வந்தபிறகுதான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிலம் கையகப்படுத்துவதில் மாத்திரம் காலதாமதம் ஏற்பட, ஏற்பட நிலத்தினுடைய விலையும் உயரும்; பாலம் அமைப்பதற்கான திட்ட மதிப்பீடும் உயரும் என்பதை உணர்ந்த காரணத்தினால்தான், நிலம் எடுப்பதற்காக மட்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஐந்து* D.R.O.-*க்களை தனியாக நியமித்து, அதற்கு*

2023 அக்டோபர் 9]

ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர்களால் சொல்லப்படுகின்ற இந்த இரண்டு பாலங்களுக்கு முன்னுரிமை அளித்து, இந்த ஆண்டே அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் பெற்று, மேம்பாலங்கள் கட்டுகின்ற பணிகளை நாங்கள் தொடங்குவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

205—

நியாய விலைக் கடை

***54657—திரு. ஒய். பிரகாஷ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் தொகுதி, விநாயகபுரம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சியில் கே.கே.127, ஓசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும், பஸ்தி முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து விநாயகபுரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட விநாயகபுரத்தில் 250 குடும்ப அட்டைகள் உள்ளன. அவர்கள் ரேஷன் பொருள்கள் வாங்க வேண்டுமென்று சொன்னால்,* NGO *காலனிக்குச் சென்று வாங்க*